

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (27.9.2024) முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக

# கே.ஆர். ஸ்ரீராம் பதவியேற்றுக் கொண்டார்!

## ஆளுநர் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்!

சென்னை, செப். 28-

சென்னை உயர் நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதியாக இருந்த ஆர். மகாதேவன் உச்சநீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப் பட்டார். அதனைத்தொடர்ந்து, மும்பை உயர் நீதிமன்றத்தின் மூத்த நீதிபதியாக இருந்த கே. ஆர். ஸ்ரீராமை, சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாக நியமிக்க உச்ச நீதிமன்ற கொலிஜியம் பரிந்துரைத்தது.

அதன்படி, நியமிக்கப் பட்ட கே.ஆர். ஸ்ரீராம், சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக இன்று பதவியேற்றுக் கொண்டார். அவருக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

தலைமை நீதிபதி கே. ஆர்.ஸ்ரீராம், மும்பை பல்கலைக்கழகம் மற்றும் லண்டனில் சட்டம் பயின்றவராவார்.

பதவியேற்பு நிகழ்ச்சியில், முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி இந்திரா பானர்ஜி, உயர்நீதிமன்ற நீதிபதிகள், சபாநாயகர் அப்பாவு, அமைச்சர்கள் துரைமுருகன், கே.என். நேரு, க.பொன்முடி, ரகுபதி, கேரள மாநில முன்னாள் ஆளுநர் சதாசிவம், சென்னை காவல் ஆணையர் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



பாசிஸ்ட்டுகளின் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைக்கு எதிராக, முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி அவர்களுக்கு, உச்சநீதிமன்றம் பிணை வழங்கியுள்ள நிலையில், 471 நாட்கள் சிறைவாசம் முடித்து, வெளியே வந்திருக்கும் அவரை நேற்று நேரில் சந்தித்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வரவேற்று வாழ்த்தினார்.

### மாவட்ட செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதி மாறன் எம்.பி. முன்னிலை! ஜி.ஜெ.பிரபு - தலைமை!

# பவளவிழா ஆண்டின் கழக முப்பெரும் விழா - மாபெரும் இரத்ததான முகாம்!

## கனிமொழி.என்.வி.என்.சோமு எம்.பி. - நா.எழிலன் எம்.எல்.ஏ. முகாமை துவக்கி வைத்து சான்றிதழ்கள் வழங்குகிறார்கள்!

சென்னை, செப்.28-

சென்னை கிழக்கு மாவட்டம், தி.மு.க. இளைஞர் அணி சார்பில் பவளவிழா ஆண்டின் கழக முப்பெரும் விழாவின், திராவிடத் தொடர் 5-வது நிகழ்ச்சியாக “குருதிக்கொடை உயிர்காக்கும்! கொள்கை படை நிலம் காக்கும்” என்ற தலைப்பில் மாபெரும் இரத்த தான முகாம் நாளை (29.09.2024, ஞாயிற்றுக்கிழமை) காலை 8.00 மணியளவில், சென்னை, வில்லிவாக்கம், டி.கே.ஏ. திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

முகாமிற்கு சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜி.ஜெ.பிரபு தலைமை வகிக்கிறார்.

சென்னை கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் -விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி., அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ., கூ.பி.ஜெயின் எம்.சி., வில்லிவாக்கம் கிழக்கு பகுதி செயலாளர் வே.வாசு, டி.லோகேஷ், சாவித்திரி வீரராகன், டி.வி. செம்மொழி எம்.சி., சுதாதீனதயாளன் எம்.சி., வானவில் விஜய், லதாவாசு எம்.சி., ஆர்.வரதன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள்: ஜெ.பாலமுருகன், பா.ஜெகதீண், க.வினோத், எஸ்.தனசேகர், ஆர்.டி.சங்கர்நானா. பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள்: ம.ஜெகதீஸ்வரன், சே.பாலாஜி, இரவைபிரபு, என்.பி.எம்.வசந்த், பா.பி.தாஸ், சே.மணிமாறன், வி.எல்.யஷ்வந்த், எம்.எஸ். அசாருதீன், தீ.ஜெயபால். வில்லிவாக்கம் மேற்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள்: சு.கமலக்கண்ணன், டி.கே. நல்லரசு, ப.மணிகண்டன், க.சிலம்பரசன், எஸ்.மோகன்ராஜ், வில்லிவாக்கம் கிழக்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள்: சி.எம்.பாரதி, ஏ.வி.ஜான்பால், டிஜிட்டல் ஜி.சுதாகர், எஸ்.ராஜா, ஆர்.சீனிவாசன் ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

இம்மாபெரும் இரத்த தான முகாமில் கழக மருத்துவ அணித்தலைவர் மருத்துவர் கனிமொழி.என்.வி.என்.சோமு எம்.பி., கழக மருத்துவ அணி செயலாளர் மருத்துவர் நா.எழிலன் எம்.எல்.ஏ. ஆகியோர் இரத்தான முகாமை துவக்கி வைத்து சான்றிதழ்கள் வழங்குகிறார்கள்.

மேலும், இப்பொதுக் கூட்டத்தில் மேயர் ஆர். பிரியாராஜன், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ., ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, ப.ரங்கநாதன், வே.கௌதமன். மாநில நிர்வாகிகள்: கே.எஸ்.இரவிச்சந்திரன், பி.கே.மூர்த்தி எம்.சி., கே.சந்துரு, சி.மகேஷ்குமார், சங்கரிநாராயணன், எஸ்.மணிமுடி, கே.எஸ்.எம்.நாதன், எம். விஜயகுமார், என்.பி.எம். ஷேக் அப்துல்லா, வே.உமாகாந்த், பரிதிஇளம்சுருதி எம்.சி, வழக்கறிஞர் இந்திரஜித். மாவட்ட நிர்வாகிகள்:கோ.ஏகப்பன், தேவஜவகர், ஜி.மகாதேவன், புனிதவதிஎத்திராசன் எம்.சி, இசட்ஆசாத் எம்.சி.

மண்டல குழு தலைவர்கள்: சொ.வேலு எம்.சி, சரிதா மகேஷ்குமார் எம்.சி, பா.ஸ்ரீராமுலு எம்.சி, டாக்டர். ஜி.சாந்தகுமாரி எம்.சி.

பகுதி கழக செயலாளர்கள்: ஐ.சி.எப். வ.முரளிதரன், எ.நாகராசன் எம்.சி, டி.எஸ்.பி. இராஜகோபால் எம்.சி., எம்.டி.ஆர்.நாகராஜ், செ.தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, வி.சுதாகர், எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர்.

பொதுக்குழு உறுப்பினர்கள்: எஸ்.பன்னீர்செல்வம், கோ.மணி, பி. ஜெ.துளசிங்கம், லயன் பி.உதயசங்கர், வி.இரமேஷ் (எ) நீலகண்டன் எம்.சி, எம்.இப்ராஹிம்கனி, அ.நிர்மலாதேவி, டாக்டர்.ஏ.பி.பூர்ணிமா எம்.சி, இரா.கலைச்செல்வி.

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள்: ஜெ. பாலமுருகன், பா.ஜெகதீஷ், க.வினோத், எஸ்.தனசேகர், ஆர்.டி.சங்கர்நானா, நா. துலுக்காணம், எல்.பி.எப். மோகன், துரைகண்ணன், ஜி.தாமோதரன், ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி, ஜி.வி. நாகவள்ளி எம்.சி, எம். பெரோஸ்கான், பி.விஜயகுமார், எம்.விநாயகம், ஆர்.எஸ்.சித்திக், ம. அசோக்குமார், க.பா.பிரதீப்குமார், கு.கிருஷ்ணமூர்த்தி, எல்.சம்பத்குமார், கா.ராஜ்முகமது, து.ஆயிரம், இரா.வீரமணி.

வில்லிவாக்கம் மேற்கு கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள்: ஜெ.எஸ்.பிரபு, வி.து. இராமமூர்த்தி, பா.இளையா, ம.கலைச்செல்வி, ஐ.சி.எப். மு. சுரேஷ்பாபு, புரசை டி.சம்பத், டி.தாமோதரன், டபுள்யூ.அமுல், நா.அறிவுடைநம்பி. வில்லிவாக்கம் மேற்கு கிழக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள்: சிட்கோ சேகர், க.சுகுமாரன், மா.அகிலன், பா.ஜானி, சொ.முருகேசன், ப.லோகுபாபு, ஜெ. தங்கராஜ், எ.வேதா, விக்னேஷ்சீனிவாசன், ச.மனோகரன், கே.பாஸ்கர், சி.தேவராஜ், காஞ்சி செ.துரை ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

இப்பொதுக்கூட்டத்தில் 94 ‘அ’ வட்ட கழக செயலாளர் ஆர்.தீனதயாளன் நன்றி கூறுகின்றார்.

### உலக சுற்றுலா தினத்தையொட்டி - எழும்பூர் அரசு அருங்காட்சியகத்தில்

# பழங்கால கட்டடங்கள் குறித்து அறிந்து கொள்ள மாணவிகள் பாரம்பரிய நடைபயணம்!

## சுற்றுலா, பண்பாடு, அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்திரமோகன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, செப் 28-

சென்னை, எழும்பூர் அரசு அருங்காட்சியத்தில் தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் சார்பில் உலக சுற்றுலா தினத்தையொட்டி பாரம்பரிய நடைபயண நிகழ்ச்சி சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தரமோகன், தலைமையில் சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி, முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கல்லூரி மாணவிகள் பழங்கால கட்டடங்கள் குறித்து அறிந்து கொள்ள பாரம்பரிய நடைபயணம் மேற்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், பேசுகையில் தெரிவித்ததாவது

தமிழ்நாட்டில் யுனஸ்கோ நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட தஞ்சை பெரிய கோவில், மாமல்லபுரம் கடற்கரை கோவில்கள் மட்டுமல்லாது 46,000 க்கும் மேற்பட்ட கோவில்கள் உள்ளன. இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கையிலான பறவைசரணாலயங்கள், வன விலங்கு சரணாலயங்கள் தமிழ்நாட்டில் தான் அமைந்துள்ளன. ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு, கொல்லிமலை, ஜவ்வாது மலை மற்றும் வால்பாறை ஆகிய மலைவாழிடங்கள் உலகம் முழுவதுமுள்ள ஏராளமான சுற்றுலா பயணிகளை தமிழ்நாட்டிற்கு ஈர்க்கின்றன. இவை கோவில்கள், மலைகள் மட்டுமல்ல. இவை நமது பாரம்பரியம் ஆகும். கட்டடங்கள் மட்டுமல்ல. இவை வரலாற்றினை நமக்கு தெரிவிக்கின்றன. நமது தமிழ்நாட்டில் நிலங்களை ஐந்து வகை நிலங்களாக வகுத்துள்ளோம். அவை ஐந்து வகை நிலங்கள் மட்டுமல்ல. வெவ்வேறு வகையான வாழ்க்கை முறைகளை நமக்கு தெரிவிக் கின்றன.

நாம் சென்னையில் நகரப்பகுதியில் வசிக்கின்றோம். நாம் பல்வேறு பகுதிகளுக்கு அடிக்கடி செல்ல முடியாது. எனவே உலக சுற்றுலா தினத்தையொட்டி, சுற்றுலாத்துறை உங்களுக்கு சென்னையில் உள்ள பாரம்பரியமிக்க அருங்காட்சியக வளாகத்தில் உள்ள கட்டடங்களின் சிறப்புகள் குறித்தும், வரலாறு, பாரம்பரியம் குறித்தும் இன்று கல்லூரி மாணவிகளான உங்களுக்கு சுற்றுலாத்துறையின் மூலம் விளக்கமளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த அருங்காட்சியகம் இந்தியாவின் 2 வது பழமையான அருங்காட்சியகம் ஆகும். மேலும் சென்னையில் சிறப்புமிக்க பழமையான மருத்துவக் கல்லூரி அமையப் பெற்றுள்ளது. உலகில் உள்ள மருத்துவக் கல்லூரிகளிலேயே பெண்களை மருத்துவக் கல்வி கற்க அனுமதித்த முதன்மை மருத்துவக் கல்லூரிகளில் ஒன்றாகும். அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த புகழ்பெற்ற மருத்துவக் கல்லூரிகள் கூட பெண்கள் மருத்துவக் கல்வி கற்க அனுமதிக்காத காலத்திலேயே சென்னை மருத்துவக் கல்லூரி உள்ளிட்ட ஒரு சில மருத்துவக் கல்லூரிகளில் மட்டும் பெண்கள் மருத்துவ கல்வி பயின்றனர்.

அத்தகைய பாரம்பரிய, தொலைநோக்கு பார்வை, கருத்தியல்களை கொண்ட உலகின் முன்னணி நகரம் நமது சென்னையாகும். அத்தகைய சென்னையின் பெருமைகளில் சிலவற்றை நீங்கள் அறிந்து கொள்ள உள்ளீர்கள். இந்த அருங்காட்சிகத்தை விட்டு நீங்கள் செல்லும்போது மிகப் பெருமையான சில விவரங்களை அறிந்து கொண்டோம் என்ற நீங்காத நினைவுகள் உங்களுக்கு கிடைக்கும் என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் வரலாற்று அறிஞர் .செல்வி. திருபுரசுந்தரி செவ்வேள், கட்டடக் கலை வல்லுநர் திருமதி. ஆஃப்ரீன் ஆகியோர் சென்னை அருங்காட்சியத்தில் உள்ள பல்வேறு கட்டடங்களுக்கு கல்லூரி மாணவிகளை அழைத்துச் சென்று கட்டடங்களின் வரலாறு மற்றும் கட்ட்டக்கலைச் சிறப்புகளை தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலர்கள், எத்திராஜ் மகளிர் கல்லூரி, மகளிர் கிறிஸ்துவ கல்லூரிகளைச் சேர்ந்த மாணவிகள் பங்கேற்றனர்.

### மாநகர் போக்குவரத்துக் கழகம் சார்பாக சென்னையில்

# 2வது கட்டமாக 66 புதிய தாழ்த்தளப் பேருந்துகள் சேவை!

## போக்குவரத்துத்துறை அறிவிப்பு!

சென்னை, செப் 28-

சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகம் சார்பாக முதற்கட்டமாக 58 தாழ்த்தள பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது. மேலும், இரண்டாம் கட்டமாக 66 புதிய தாழ்த்தள பேருந்துகள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வந்துள்ளது. அவைகள் இயக்கப்படும் வழித்தடங்கள் குறித்த விவரங்களை போக்குவரத்துக்கழகம் வெளியிட்டுள்ளது.

தடம் எண் D70 அம்பத்தூர் தொழிற்பேட்டையில் இருந்து வேளச்சேரிக்கு 5 பேருந்துகள். தடம் எண் 104 தாம்பரத்திலிருந்து செங்குன்றம்க்கு 5 பேருந்துகள். தடம் எண் 6D டோல்கேட் முதல் திருவான்மியூர் வழித்தடத்தில் 8 பேருந்துகளும், தடம் எண் 101 திருவெற்றியூர் முதல் பூந்தமல்லி வரையிலான வழித்தடத்தில் 2 பேருந்துகளும் தடம் எண் 104C கோயம்பேட்டில் இருந்து கிளாம்பாக்கம் வரை செல்லும் வழித்தடத்தில் 9 பேருந்துகள் இயக்கப்படும்.

27B கோயம்பேடு பேருந்து நிலையத்தில் இருந்து அண்ணாசதுக்கம் செல்லும் வழித்தடத்தில் 5 பேருந்துகளும், தாம்பரத்தில் இருந்து ஸ்ரீபெரும்புதூர் வரை செல்லும் வழித்தடத்தில் 5 பேருந்துகளும், தாம்பரத்தில் இருந்து மாமல்லபுரம் வரை செல்லக்கூடிய தடம் எண் 515 கொண்ட 5 பேருந்துகளும், தடம் எண் 70G வடபழனி முதல் கூடுவாஞ்சேரி செல்லும் வழித்தடத்தில் 6 பேருந்துகளும், தடம் எண் 18AET கிளம்பாக்கம் முதல் பிராட்வே செல்லும் வழித்தடத்தில் 10 பேருந்தும் தடம் எண் 21G பிராட்வே முதல் கிளம்பாக்கம் பேருந்து நிலையம் வரை செல்ல 6 பேருந்துகளும் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக இயக்கப்பட்டு வருகிறது.



திருவள்ளூர் மாவட்டம், கும்முடிப்பூண்டி தொகுதி, கும்முடிப்பூண்டி ஒன்றியத்தில் பாதிர்வேடு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா மிதி வண்டிகளை மாவட்ட கழக செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான டி. ஜெ.கோவிந்தராஜன் வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் பா.செ.குணசேகரன், எஸ்.ரமேஷ், கே.வி.லோகேஷ், சராதா முத்துசாமி, மனோகரன், உதயகாந்தம்மாள், எசுரத்தினம், க.பரத்குமார், வேதச்சாலம், திருஞானம், டி.ஜெ.ஜி.தமிழரசன், சந்திரமோகன், சீனிவாசன், லாரன்ஸ், மூர்த்தி, நாகராஜன், இளங்கோ, காமராஜ், வடிவேல், பழனி, கே.வி.நாகராஜ், வாசு, மெய்யழகன், லால், மனோஜ், மணிகண்டன், சதா, ஏசுராஜ், குமார், உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.





முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (27.09.2024) சென்னை, கோல்டன் பிளாட் எதிரில் உள்ள சின்னசாமி திருமண மண்டபத்தில் சென்னை கிழக்கு மாவட்டம், அம்பத்தூர் தெற்கு பகுதி சார்பில் தமிழர்களின் சுடர் – திராவிடர் தொடர் பவளவிழா ஆண்டின் முப்பெரும் விழாவில் ”திராவிட நெடுந்தொடர் தேசத்தின் ஒளிச்சுடர் என்ற தலைப்பில் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளரும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு முன்னிலையில், பகுதி செயலாளர் டி.எஸ்.பி.ராஜகோபால் தலைமையில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி, திரைப்பட நடிகர் சத்யராஜ், பேராசிரியர் அப்துல் காதர் ஆகியோர் விழாப் பேருரையாற்றினார்கள். இக்கூட்டத்தில் மேயர் பிரியா ராஜன், அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், 7வது மண்டல குழு தலைவர் பி.கே.மூர்த்தி, அம்பத்தூர் கிழக்கு பகுதி செயலாளர் எம்.டி.ஆர் நாகராஜ், தொகுதி பொறுப்பாளர் பி.டி.சி.செல்வராஜ், எல்.பி.எஃப்.மோகன், டாக்டர்.பி.பூர்ணிமா, ரமேஷ் (எ) நீலகண்டன், டாக்டர்.ஜி.சாந்தகுமாரி, ஜெ.பாலமுருகன், ஜி.வி. நாகவள்ளி, எஸ் உமா, கு.கிருஷ்ணமூர்த்தி,து. ஆயிரம், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



உலக சுற்றுலா தினத்தையொட்டி தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் சார்பில் நேற்று (27.9.2024) எழும்பூர் அரசு அருங்காட்சியத்தில் பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவிகள் பழங்கால கட்டடங்கள் குறித்து அறிந்து கொள்ள பாரம்பரிய நடைபயணம் மேற்கொண்ட நிகழ்ச்சி சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தரமோகன், தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி, சுற்றுலாத்துறை மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலர்கள் கலந்து கொண்டனர்.